இயல் - பத்து

# பொருளியல்

# 10. பொருளியல்

உலகத்தில் மனிதனைப் படைப்பதற்குப் பல நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே, ஒவ்வொரு மனிதனும் அவனுடைய உலக வாழ்வில் எந்தந்தப் பொருட்களை உண்பான், உடுத்துவான், தனக்கென எவற்றை எல்லாம் பெற்றுக்கொள்வான் என்பதனை இறைவன் முடிவு செய்துவிட்டான். அம்மனிதனுக்குத் தேவைப்படும்போதெல்லாம் அவனுக்கு இறைவன் அப்பொருளினை வழங்கும் பொறுப்பினை எடுத்துக் கொண்டான். எனினும் மனிதன் அந்தப் பொருட்களை, செல்வங்களைத் தேடக்கூடிய பொறுப்பினை இறைவனுடைய கட்டளைப்படித் தேட வேண்டும் என்றும் கூறியுள்ளான்.

ஒரு மனிதன் எவ்வளவு நற்செயல்கள் புரிந்தாலும், அழுது, கதறி, இறைவனிடம் பிரார்த்தனை செய்தாலும் அவனது உணவு, குடிப்பு, உடை முதலியவை இறைவன் வகுத்த வழிகளில் பெறப்பட்டிருக்க வில்லையென்றால் அவனது வணக்கங்களும், பிரார்த்தனைகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. ஒருவனுடைய உணவில் உடையில் பத்திலொரு பாகம் தவறான வழியில் ஈட்டப்பட்டிருந்தாலும் அவனுடைய வணக்க வழிபாடுகளும் பிரார்த்தனைகளும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. தடுக்கப்பட்ட உணவு உண்டு அதைக் கொண்டு உருவான இரத்தம் ஒரு மனிதனின் உடலில் ஓடிக்கொண்டிருக்கும் தருணத்திலும் ஹராமாக்கப்பட்ட உடையணிந்த பொழுதும் அந்த மனிதனுடைய வணக்கங்களும் பிரார்த்தனைகளும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்று திருநபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். எனவே இறைவன் விதித்த, விலக்கிய வழிமுறைகளையறிந்து பொருள்களை ஈட்ட வேண்டும். இஸ்லாமியருக்கான பொருள் ஈட்டும் வழிமுறைகளையும் ஈட்டிய பொருளினை முறையறிந்து செலவு செய்யும் விதம் குறித்தும் இவ்இயல் மொழிகிறது.

**அளவையிலும் நிலுவையிலும் நேர்மை**

பொருளீட்டுவதற்கு வியபாரம், விவசாயம், கைத்தொழில், கூலிவேலை என்று எத்தனையோ வழிமுறைகள் உலகில் உள்ளன. அவை ஒவ்வொன்றிலும் பல விதிமுறைகளும் உள்ளன. ‘வர்த்தகத்தில் பொருள் விருத்தியுண்டு’ என்று முகம்மது நபி (ஸல்) கூறியுள்ளார்கள். ஆனால் வியாபாரத்தில் நேர்மை இருத்தல் வேண்டும். அளவை, நிலுவையில் நியாயம் வேண்டும் வாங்குவதற்கு

ஒரு நிலுவையும் விற்பதற்கு ஒரு நிலுவையுமின்றி நியாயமான முறையில் நிறுத்தல், அளத்தல் செய்தல் வேண்டும். இதனைத் திருமறையில்,

> நீங்கள் அளந்தால் பூரணமாக அளவுங்கள் (நிறுத்தால்) சரியான எடையைக் கொண்டு நிறுங்கள்: இது (உங்களுக்கு) மிக்க நன்று மிக்க அழகான பலனையும் தரும். (7:35)

> அவர்கள் மனிதர்களிடம் அளந்து கொடுத்தாலும் அல்லது நிறுத்திக் கொடுத்தாலும் குறைத்து விடுகின்றனர். மகத்தான ஒரு நாளில் நிச்சயமாக அவர்கள் உயிர்கொடுத்து எழுப்பப்படுவார்கள் என்று அவர்கள் நம்பவில்லையா? (83:1-5)

என்று திருக்குர்ஆன் மொழிகிறது. நபிமார்களில் பலர் வியாபாரம் செய்து வழிகாட்டியுள்ளனர். அவர்களும் அளவை நிலுவையில் மோசடி செய்வது பற்றி எச்சரித்துக் கண்டித்துள்ளனர்.

> ஒரு சமயம் அண்ணல் நபி(ஸல்) அவர்கள் ஒரு தானிய குவியலுக்கு அருகில் கடந்து சென்றபோது, நபியவர்கள் தமது கையை அதனுள் புகுத்தியபோது விரல்களில் ஈரம்படுவதை உணர்ந்தார்கள். அப்போது, நபியவர்கள் கேட்டார்கள் “தானியத்தின் உரிமையாளரே! என்ன இது? அதற்கு அதன் உரிமையாளர் விடை கூறினார். “அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இக்குவியலில் மழை பெய்துவிட்டது” நபியவர்கள் கூறினார்கள் “அப்படியாயின் நீர் ஏன் அந்த ஈரமான தானியத்தை மக்களின் பார்வையில் படும் வண்ணம் மேலே வைத்திடவில்லை? ஏமாற்றுகிறவர்களுக்கு என்னுடன் எந்த தொடர்பும் இல்லை”[1] (முஸ்லிம் மிஷ்காத்)

என்பதன்வழி, பொருள்களைக் கொடுக்கும்போது அளவிற்கு அதிகமாக மனமார வழங்குங்கள் என்றும், வாங்கும்போது அளவிற்கும் அதிகமாக வற்புறுத்தி வாங்காதீர்கள் என்றும் நபிகள் நாயகம் (ஸல்) கூறியுள்ளார்கள்.

**விற்பனை பொருட்களைப் பதுக்குதல்**

விற்பனைப் பொருட்களைப் பதுக்கி வைப்பதை இஸ்லாம் தடுக்கிறது. அதிலும் உணவுப் பொருட்களைப் பதுக்கி வைப்பதை வன்மையாகக் கண்டிக்கிறது. மக்கள் சிரமப்பட்டுக் கொண்டிருக்கும்போது விலை, ஏறட்டும் என்று உணவுப் பொருட்களை, தானியங்களைப் பதுக்கி வைப்பதை இஸ்லாம் மிகமிக கண்டிக்கிறது. தங்களது குடும்பத் தேவைகளுக்கு எனப் பதுக்கி வைப்பதை அல்லாஹ்வும் அவனது திருத்தூதரும் விரும்பவில்லை. தமது தேவைக்கு அதிகமாக உள்ள பொருட்களைத் தேவையுள்ளவர்களுக்கு வழங்குவதைத்தான் இஸ்லாம் விரும்புகின்றது. 'பதுக்கல் செய்பவன் பாவியாவான்' எனவும், 'பதுக்கள் செய்யாமல் பொருட்களைக் கடைவீதிக்குக் கொண்டு வருபவர் இறைவனின் அருளுக்குறியவர்' எனவும், 'பதுக்கி வைப்பவர் சாபத்திற்குரியவர்' எனவும் நபிநாதர் கூறியுள்ளார்கள்.

தானியத்தைப் பதுக்கி வைக்கின்றவன் குற்றவாளியாவான். இஹ்திகார்[2] (பதுக்கல்) என்பது விலைவாசி நன்கு உயர்ந்துவிடும்போது விற்றுக்கொள்ளலாம் எனும் எண்ணத்தில் உணவு தானியத்தைப் பதுக்கிவைப்பதைக் குறிக்கும். இவ்வகை வியாபாரிகள் உண்மையில் நாட்டு மக்களின் நிலை மற்றும் நிர்ப்பந்த சூழ்நிலையைப் பயன்படுத்தி இதுபோன்ற சுயநல நடவடிக்கையில் இறங்குகின்றார்கள். ஓர் இஸ்லாமியச் சமுதாயத்தில் இச்செயல் சகித்துக் கொள்ள முடியாததாகும்.

ஆரம்பகால மார்க்க அறிஞர்களிடம் அவை என்னென்ன பொருட்கள் எனக் கேட்டபோது, அவர்கள் கூறினார்கள், "பதுக்கல் என்பது பொதுவான தானிய (உண்) பொருட்களைப் பதுக்கி வைத்தல் மட்டுமல்ல! மாறாக என்னென்ன பொருட்கள் சில நாட்கள் சந்தைக்கு வரவில்லையெனில், அதனால் பொதுமக்கள் அவதியுறுவார்களோ அத்தகைய அனைத்து வித அத்தியாவசியப் பொருட்களைத் தடுத்து வைத்தலையும் குறிக்கிறது. சான்றாக எரிபொருட்கள், மருந்துகள், சர்க்கரை போன்றவையாகும். அண்ணல் நபி (ஸல்) அவர்கள்,

> உணவு தானியத்தைப் பதுக்கி வைப்பவன் சாபத்திற்குரியவனாவான்[3]

என்பதாய்க் குறிப்பிடுகிறார்கள்.

**அடைமானம் வைத்தல்**

சில சமயம் நமது தேவையை நிறைவேற்றிக் கொள்ள தேவைப்படும் பணம் கிடைக்கவில்லையெனில் மற்றவர்களிடம் கடன் பெறுவதற்கு உத்தரவாதமாக ஏதாவது ஒரு பொருளை அவர்களிடம் அடைமானமாகக் கொடுத்துத் தேவைப்படும் பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கு இஸ்லாம் அனுமதிக்கிறது. ஆனால் அடைமானமாகப் பெற்றுக்கொண்ட பொருளைத் தான் உபயோகப் படுத்துவதையோ கடனைத் திருப்பித் தரும் தருணத்தில் அடைமானம் வைக்கப்பட்ட பொருளை உடனடியாகத் திருப்பித்தராமலிருப்பதையோ, கொடுத்த கடனுக்கு வட்டியாகத் தொகையைச் சேர்த்து வாங்குவதையோ இஸ்லாம் ஏற்றுக் கொள்ளவில்லை. கடனாகப் பெற்றுக்கொள்வதற்கு எழுத்து மூலமாகப்பதிந்து கொள்ளவேண்டும். அத்துடன் தேவைப்பட்டால் அடைமானமாகப் பொருளைக் கொடுத்துப் பணம் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் அடைமானம், அடகு, ஒத்தி, குத்தகை என்ற பெயரில் ஈடுவைக்கப்பட்ட பொருள்களை உபயோகித்துக் கொள்வதையும் அதில் மோசடி செய்வதையும், திருப்பியளிக்கும் போது தான் கொடுத்த பணத்திற்கு வட்டி கணக்கிட்டு வாங்குவதையும் இஸ்லாம் வண்மையாகக் கண்டிக்கிறது. இதனைத் திருமறையில் இறைவன்,

> உங்களில் ஒருவர் மற்றொருவரை நம்பி ஏதேனும் பொருளை ஒப்படைத்தால் நம்பப்பட்டவர் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பொருளைத் திருப்பிக் கொடுத்து விடவேண்டும் (2:283)

என்று குறிப்பிடுகிறான்.

> ஊசி நூல் போன்ற பொருட்களைக் கூட திரும்பக்கொடுத்து விடுங்கள் மேலும் மோசடிசெய்வதிலிருந்து தவிர்த்துக் கொள்ளுங்கள், ஏனெனில் மோசடி என்பது மறுமை நாளில் இழிவுக்கும் மனவருத்தத்திற்கும் வழிவகுக்கும்[4] (நாஸாயீ மிஷ்காத்)

என்பதன் வழி சிறிய பொருளாக இருப்பினும் அப்பொருள் தம்முடையது இல்லையெனில் அதனை உரியவரிடம் ஒப்படைத்துவிட வேண்டும்; ஏனெனில் அப்பொருள் அமானிதப்பொருளாகும். இப்படியிருக்க ஒருவர் தம்மை நம்பி

ஒப்படைத்த பொருளை ஏமாற்றும் செயல் மோசடி ஆகும். இதனை இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கிறது.

**வியாபாரத்தின் மேன்மை**

தனது வாழ்க்கைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதில் மனிதன் ஏதாவது மார்க்கத்தின் வழி அனுமதிக்கப்பட்ட தொழில்களில் ஈடுபடுதல் வேண்டும். தொழில்களிலெல்லாம் மேலானது விவசாயத்தொழில் என்றாலும் வாணிகமே சிறந்தது என்று கூறப்படுகின்றது. ஏனெனில்,

> உங்களின் உணவில் பத்தில் ஒன்பது பங்கு வியாபாரத்தாலேயே கிடைக்கின்றது. எனவே வியாபாரத்தையே விரும்பிப் புரியுங்கள்

என்று திருநபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். நேர்மையான வியாபாரத்தில் இறைவனுடைய திருப்தியும், வாழ்வில் விருத்தியும் உள்ளது என்றும், உண்மையைப் பேசுகின்ற மோசடி செய்யாத ஒரு வியாபாரி மறுமையில் இறைத்தூதர்கள், உண்மையாளர்கள், உயிர்த்தியாகிகள் ஆகியோருடன் இருப்பர் என்றும், நேர்மையான வியாபாரியும் நானும் (இருவிரல்கள் போன்று) சேர்ந்து சுவனத்திலிருப்போம் என்றும் நாயகம் (ஸல்) நவின்றுள்ளார்கள்.

பொருளீட்ட வேண்டுமென்ற பேராசையில் அதிக விலைக்கு விற்பதையும், அளவை, நிலுவையில் மோசடி செய்வதையும் பொய் சொல்லி விற்பதையும், கலப்படம் செய்வதையும், குறைகளை மறைத்து விற்பதையும், மார்க்கம் தடைசெய்துள்ள பொருள்களை விற்பதையும், பொருளைக் காட்டாமல் விலை பேசுவதையும் இன்னும் இவை போன்றவைகளையும் இஸ்லாம் தடைசெய்துள்ளது. இத்தகைய வியாபாரம் செய்பவர்களுக்குக் கடுமையான தண்டனைகளையும் மார்க்கம் இயம்பி உள்ளது. கொள்முதல் செய்வதிலும் விற்பனை செய்வதிலும், கடனைக் கோருவதிலும், மென்மையாக நற்பண்புடன் நடந்து கொள்பவர் மீதும் இறைவன் அருளைப் பொழிவானாக என நபிநாதர் அருளியுள்ளார்கள். மேலும்மொரு நபிமொழியில்,

> உண்மை பேசி நாணயத்துடன் நடந்து கொள்ளும் ஒரு வணிகர், மறுமை நாளில் நபிமார்கள், உண்மையாளர்கள், ஷஹீத்[5] (இறைவழியில்

உயிர்த்தியாகம் செய்தோர்) ஆகியோருடன் இருப்பார்[6] (திர்மிதி)

என்று உண்மை பேசும் வணிகரின் நிலை மறுமையில் எப்படியிருக்கும் என்று உரைத்தார்கள்.

**கைத்தொழில்**

மனிதன் தனது கரங்களால் உழைத்து உண்ணும் உணவே உணவுகளில் மேலானது என்று நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள். கைத்தொழில் புரிபவர்களைப் பெருமானார்(ஸல்) அவர்கள் வாழ்த்தியருளியுள்ளார்கள். கைத்தொழில் புரிபவர்கள் கவலையடையத் தேவையில்லை என்பதுதான் இஸ்லாத்தின் போதனை. ஒருவர் தனது கைகளால் உழைப்பதும், மோசடி செய்யாமல் நடத்தும் வாணிபமும் தான் சிறந்த சம்பாத்தியம் எனப் பெருமானார் (ஸல்) கூறியுள்ளார்கள்.

> ஒருவன் தன் கையால் உழைப்பதும் - மோசடி செய்யாமல் பொய் பேசாமல் ஒருவன் நடத்தும் வாணிபமும் தான்[7] (மிஷ்காத்)

எனவரும் நபிமொழி இதனை மொழிகிறது.

**தொழில் செய்தல்**

தகுதிக்கேற்பப் பணி செய்தலும் அதற்குரிய ஊதியம் பெற்று வாழ்க்கை நடத்துவதையும் இஸ்லாம் அனுமதிக்கின்றது. தொழில் செய்வது தனது வருவாய்க்குரிய வழியாக மட்டும் கருதாமல் மற்றவர்களுக்கு ஊழியம் புரியும் வாய்ப்பாகக் கருத வேண்டும். அதிகாரத்திலிருப்பவர்கள் அதிகாரம் புரிவதுதான் தமது அலுவல் என்று எண்ணாமல் தனக்குக் கீழுள்ளவர்களுக்குச் சேவை செய்வதற்குத் தமக்குக் கிடைத்துள்ள பாக்கியமாகக் கருதுதல் வேண்டும். உண்மை ஊழியனே சரியான அதிகாரியாகும். ஆனால் தனது கடமையை ஆற்ற வேண்டிய அதிகாரி, தமக்கு நிர்ணயம் செய்யப்பட்ட அலுவல்களை நிறைவேற்றிய பின்புதான் அதற்குரிய ஊதியத்தை பெற்றுக் கொள்ளவேண்டும். தனது கடமையை நிறைவேற்றுவதற்காகத் தனது ஊதியம் அல்லாது, பிறரிடம் கையூட்டு (லஞ்சம்) பெற்றக்கொள்வதையோ, வேறு வழிகளில் அன்பளிப்புகள் வெகுமதிகள் பெற்றுக்கொள்வதையோ இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கிறது.

தமது அதிகாரத்திலுள்ள மனிதர்களையோ, பொருட்களையோ, துர்ப்பிரயோகம் செய்வதையும் தமது விருப்பு வெறுப்பிற்கேற்ப நடத்துவதையும் இஸ்லாம் அனுமதிக்கவில்லை. இலஞ்சம் - ஊழல், மோசடி பற்றி,

> நீங்கள் ஒருவர் மற்றவரின் பொருள்களைத் தவறான முறையில் உண்ணாதீர்கள்: மேலும் பிற மனிதர்களுடைய பொருள்களில் ஏதேனும் ஒரு பகுதியை அநீதியான முறையில் தின்பதற்காக - அது தவறு என நீங்கள் அறிந்திருந்தும் - அதற்குரிய வாய்ப்பைப் பெற அதிகாரிகளை அனுகாதீர்கள் (2:188)

என்று திருமறையும்,

> நாம் பதவியில் அமர்த்தி இருக்கும் ஒருவர் நம்மிடமிருந்து ஓர் ஊசியை மறைத்தாலும், அல்லது அதனை விட ஒரு சிறிய பொருளை மறைத்தாலும் அதனை அவர் அபகரித்துக் கொண்டார் என்றே பொருள் மறுமை நாளில் அதனை அவர் சுமந்த வண்ணமே வருவார்[8] (முஸ்லிம்)

> பரிசாகக் கிடைத்த பொருளை அரசிடம் ஒப்படைக்காமல் தம்மிடம் வைத்துக் கொண்ட அதிகாரியைப் பார்த்து நபிகள் நாயகம் (ஸல்) கூறியுள்ளார்கள். இவர் (அரசுப்பணிபுரியாமல்) தம் தாய் வீட்டிலேயே இருந்தால் அப்பொருள்கள் அவருக்குக் கிட்டியிருக்குமா[9] (புகாரி முஸ்லிம்)

என்றும் நபிமொழியும் கூறுகிறது.

இலஞ்சமாய்ப் பெறக்கூடிய பொருள்கள் அவர்கள் அந்தப் பணியில் இல்லாவிட்டால் அந்தப் பொருட்கள் அவர்களுக்குக் கிடைக்குமா, என்றால் இல்லை. எனில் அந்தப் பொருளினை அவர் பணிபுரியும் அலுவலகத்திலேயே ஒப்படைக்க வேண்டும். இல்லையெனில் அதைப் பெற்றிருக்கவே கூடாது என்று இஸ்லாம் கூறுகிறது.

**கூலிவேலை**

வாழ்க்கைத் தேவைகளை நிறவேற்றிக் கொள்வதற்காகக் கூலி வேலை செய்வதையும் இஸ்லாம் ஊக்குவிக்கிறது. கூலிக்காரர்களின் கூலியை அவர்கள் வியர்வை உலர்வதற்கு முன்பே பரிபூரணமாகக் கொடுத்துவிட வேண்டும் என்று இஸ்லாம் கூறுகிறது. பேசிய கூலியை மோசடி செய்யாமல் வேலை முடிந்தவுடன் வழங்கிவிட வேண்டும். பேசிய கூலிக்குப் பாதகமில்லாமல் ஏற்றுக்கொண்ட வேலையை முடித்துவிட வேண்டும். கூலி வேலையைச் செய்பவர்களையும் சமமாகச் சகோதரர்களாகப் பாவித்து நடத்துதல் வேண்டும்.

> மனிதனே! நிச்சயமாக நீ உன் இறைவனிடம் சேரும்வரை முனைந்து உழைப்பவனாக உழைக்கிறாய் (84:06)

என்று திருமறையில் இறைவன் குறிப்பிடுகின்றான். மேலும்,

> தனது கரங்களால் கடினமாக உழைத்துப்பெற்ற செல்வத்தில் உண்ணுவதைவிட சிறந்த உணவு ஏதுமில்லை[10] (புகாரி)

> ஒருவன் தன் கையால் உழைப்பதும் மோசடி செய்யாமல், பொய் பேசாமல் ஒருவன் நடத்தும் வாணிபமும் தான் யாவற்றிலும் சிறந்த சம்பாத்தியம் (மிஷ்காத்)

> உழைப்பவரின் வியர்வை உலருவதற்கு முன் அவருடைய கூலியைக் கொடுத்து விடுங்கள்[11] (இப்னு மாஜா)

என்று நபிமொழியும் கூறுகிறது.

**இஸ்லாத்தில் விலக்கப்பட்ட தொழில்கள்**

இஸ்லாத்தில் விலக்கப்பட்ட பொருள்களை விற்பனை செய்வதும், தயாரிப்பதும், தடுக்கப்பட்டவைகளாகும். சிலைகள், சிற்பங்கள், உருவங்கள் அமைப்பதும், அவற்றை விற்பதும் கூடாது. கள், சாராயம் போன்ற போதைப்பொருட்களைத் தயாரிப்பதும், விற்பதும் கூடாது. பன்றி இறைச்சி, இரத்தம் இவற்றை விற்பதும் கூடாது. சூதாட்டத் தொழில், லாட்டரி வியாபாரம்

முதலியன கூடாது. மக்களுக்கு ஆகுமாக்கப்பட்ட பொருட்களைத் தயாரிப்பதையும் விற்பதையும் இஸ்லாம் அனுமதிக்கின்றது.

**இரத்தல்**

பிறரிடம் சென்று நின்று யாசித்தல் கூடாது. ஆயினும் வறுமையின் காரணமாக யாரவது யாசகம் கேட்டால் அவருக்கு உதவ வேண்டும். இதனை,

> வறுமையில் வாடி தன் தேவையைக் கருதி
> யாசிப்பவனை விரட்டாதீர் (93:10)

என்று திருமறை கூறுகிறது.

> யாசிப்பவன் குதிரை மீது ஏறிவந்து யாசித்தாலும்
> வழங்குங்கள்

என்று நபிகள் பெருமனார் (ஸல்) அவர்கள் மொழிந்தாலும் யாசிப்பதை அஹ்லாஹ்வும், ரசூலும் விரும்பவில்லை.

> யாசித்து கீழாக நீட்டும் கையை விட வழங்குவதில்
> மேலாக உள்ள கையே சிறந்தது

என்றும்

> செல்வத்தைப் பெருக்கிக் கொள்வதற்காக யாசகம்
> செய்வோனை இறைவன் நாசமாக்குவானாக!

என்றும்

> மக்களிடம் யாசித்து நீட்டும் கரத்தை மூடவே
> முடியாது

என்றும் நாயகம் (ஸல்) மொழிந்துள்ளார்கள். ஏழ்மையிலும், வறுமையிலும், வாடுபவர்களைத் தேடி தானதர்மம், அன்பளிப்புகள் மூலம் தங்களுடைய பொருளை வாரி வழங்கவேண்டும் என்றும் இஸ்லாம் இயம்புகிறது. நம்முடைய தேவைகளை மக்கள் முன்வைத்து யாசிப்பதையும், பிச்சைக்காரர்கள் உருவாக்குவதையும் இஸ்லாம் அனுமதிக்கவில்லை. செல்வந்தா் ஏழைகளின் தேவைகளையறிந்து உதவவேண்டுமென இஸ்லாம் போதிக்கிறது.

இறைமறையில் இறைவன், ‘வறுமையினை விரட்டாதீங்கள். உங்களின் தேவைக்குப்போக மீதமுள்ளவற்றைத் தருமமாகச் செலவு செய்யுங்கள் என்றும்

உங்களின் செலவுகளை வீண் விரயம் செய்யாதீர்கள்' என்றும் கூறுகின்றான். இதனை,

> உங்களுடைய தேவைக்குப் போக மீதமுள்ளதை (தருமமாக) செலவு செய்யுங்கள் (2:219)
>
> உறவினர்களுக்கும், வறியவர்களுக்கும், வழிப்போக்கர்களுக்கும் அவரவர்க்குரிய உரிமையை வழங்கிவிடும், ஆனால் வீண்செலவு செய்யாதீர் (17:26)
>
> அவர்களுடைய செல்வங்களில் யாசிப்பவருக்கும் இல்லாதாருக்கும் நிர்ணயிக்கப்பட்ட உரிமை இருக்கிறது (70:24,25)
>
> செல்வம் உங்களிலுள்ள செல்வந்தர்களிடையே மட்டும் சுற்றிக் கொண்டிருக்கக் கூடாது (59:7)

எனத் திருமறையும்,

> எவரிடத்தும் எதற்காகவும் கையேந்துவதில்லை என்ற உறுதிமொழியை ஒருவர் எனக்கு அளித்தால் அவர் சுவனம் செல்வதற்கான உறுதிமொழியை நான் அவருக்கு அளிக்கின்றேன்"[12] (அபூதாவூத்)

என நபிமொழியும் மொழிகிறது. மனிதன் தன் சொந்த முயற்சியில் முன்னேறுதல் வேண்டும். பிறரிடம் கையேந்தி யாசகம் கேட்டல் என்பதை இறைவனும் நபிமொழியும் அனுமதிக்கவில்லை என்ற நிலையினை அறிய முடிகிறது.

**சூது**

உழைப்பின்றி நேர்மைக்குப் புறம்பாகப் பலருடைய பொருளைப் போட்டுச் சூதாட்டி பயன் அடைவதை இஸ்லாம் தடை செய்கிறது. மது குடிப்பதன் மூலம் ஒரு சில பயன் இருப்பது போல் தோன்றினாலும் அதிக அளவில் அதனால் கெடுதியுள்ளது. இதைப் போல் சூதாட்டத்தின் மூலம் ஒருசிலர் பயனடைவது போல் தோன்றினாலும் பலருக்கு அதனால் நஷ்டமும் நாசமும் தான் உண்டாகிறது. எனவே திருமறை,

சாரயாத்தைப் பற்றியும், சூதாட்டத்தைப் பற்றியும் அவர்கள் உம்மிடம் (விளக்கம்) கேட்கின்றனர் (நபியே) நீர்கூறுவீராக. இவ்விரண்டிலும் பெரும்பாலும் இருக்கின்றது. மனிதர்களுக்குச் சில பயன்களிலிருந்தாலும் அவ்விரண்டிலுள்ள பாவம் அவ்விரண்டிலுள்ள பயன்களைவிட மிகப்பெரிது (2:219)

விசுவாசிகளே! நிச்சயமாக மதுபானமும் சூதாட்டமும், விக்கிர (சிலை) வணக்கமும், அம்பெறிந்து குறிகேட்பதும், ஷைத்தானுடைய அருவருப்பான செயல்களில் உள்ளவையாகும் எனவே இவைகளிலிருந்து நீங்கள் விலகிக் கொள்ளுங்கள் நீங்கள் வெற்றி பெறுவீர்கள் (5:90)

என்று திருமறையில் இறைவன் கூறுகின்றார். மேலும் நபிமொழியில்,

எந்தப் பொருளை அதிக அளவில் உட்கொண்டால் போதை உண்டாகுமோ அதே பொருளைக் குறைந்த அளவில் உட்கொள்வதும் தடை செய்யப்பட்டுள்ளது”[13] (நூல்: அஹ்மத் அபூதாவூத்)

என்பதாய் மொழியப்பட்டுள்ளது.

சூது மனிதனை கீழான நிலைக்கு தள்ளும், பொருளாதாரத்தை அழித்துவிடும். உணவிற்காகப் பிறரிடம் கையேந்த வைத்துவிடும்.

**விபச்சாரம்**

விபச்சாரத்தின் தீங்குகளை அதனால் விளையும் விளைவுகளையும் அதற்குரிய கடின தண்டனைகளையும் கொடிய வேதனைகளையும் திருமறையும், இறைத்தூதரும் எடுத்தியம்பி இருக்கின்றனர். எனினும் இவ்வுலக அற்பப்பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்காகப் பெண்களை வைத்து விபச்சார விடுதிகள் நடத்துவதை இறைவன் மிகவும் கடினமாகக் கண்டிக்கிறான். இதனை,

> நீங்கள் விபச்சாரத்திற்கு நெருங்க வேண்டாம் ஏனெனில் நிச்சயமாக அது மானக் கேடானதாகவும் தீய வழியாகவும் இருக்கிறது (17:32)

> தங்களது கற்பைக் காத்துக் கொண்டிருக்கும் உங்கள் அடிமைப் பெண்களைக் (கூட) இவ்வுலக வாழ்க்கைக்குரிய ஒரு அற்பப்பொருளை நீங்கள் அடையும் பொருட்டு விபச்சாரம் செய்யும்படி அவர்களை நிர்பந்திக்காதீர்கள் (24:33)

என இறைவன் தனது திருமறையில் கூறுகின்றான். விபச்சாரத்தின் பக்கம் நெருங்கவே வேண்டாம் என்று திருமறை கூறும்போது விபச்சாரத்தையே தொழிலாகாக் கொள்வது எத்தகைய இழிசெயல் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

**மதுபானம்**

மதியைக் கெடுக்கும் மதுவை, குடியைக் கெடுக்கும் குடியை இறைவன் தடை செய்துள்ளான். மது அருந்துவதே பெரும்பாவமெனில் அதனை விற்பனை செய்து மற்றவர்களை நாசப்படுத்தி நரகில் தள்ளுவது பாவத்தில் கொடிய பாவம் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

> மதியைக் கெடுக்கும் பொருள் அனைத்தும் பாவங்களின் தொகுப்பாகும்" மதுபானம் அருந்த வேண்டாம்: ஏனெனில் நிச்சயமாக அது எல்லா கேவலமான செயல்களுக்கும் முதன்மையானதாகும். குடிகாரனுக்கு 40 சவுக்கடிகள் கொடுக்க வேண்டும். மதுபானம் அருந்திய போது அவன் மு..மின் அல்லன் மதுபான பழக்கமுடையவன் சுவனம் புகான்

என்று நபி (ஸல்) அவர்கள் எடுத்தியம்பியுள்ளார்கள் மேலும்,

> மது குடிப்பவர்கள், தயாரிப்பவர்கள், சுமந்து வருபவர்கள், வாங்குபவர்கள் அனைவரும் பாவத்தில் சமமானவர்களே

என்றும் கூறியுள்ளார்கள். எனவே மதுகுடிப்பதைப் போன்று மதுபானங்கள் விற்பனை செய்வதும் தடுக்கப்பட்டுள்ளது.

**இலஞ்சம்**

தான் செய்ய வேண்டிய வேலையைத் தனது கடமை என்று கருதி அதற்குரிய ஊதியத்தைத் தவிர வேறு கைமாறு கருதாமல் பணிசெய்ய வேண்டும். ஊதியமும் பெற்றுக்கொண்டு தான் செய்ய வேண்டிய சிறுசிறு பணிக்கும் கைமாறு கருதி, இலஞ்சம் (கையூட்டு) பெறுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இலஞ்சம் வாங்குவதும் பாவம், கொடுப்பதும் பாவம் என்பதைத் திருமறையில்,

> மேலும் நீங்கள் உங்களுக்கிடையில் ஒருவர் மற்றவரின் பொருட்களைத் தவறான முறையில் உண்ண வேண்டாம்(தவறுஎன்று) நீங்களறிந்து (மற்ற) மக்களின் பொருட்களில் எதனையும் பாவமான வழியில் அடையும் பொருட்டு (இலஞ்சம் கொடுக்க) அதிகாரிகளிடம் செல்லாதீர்கள் (2:188)

என்று திருமறை இலஞ்சம் கொடுப்பது பற்றி எச்சரிக்கை செய்துள்ளது. நபி மொழியில்,

> இலஞ்சம் வாங்குபவர், கொடுப்பவர் அதற்கு ஏற்பாடு செய்பவர் ஆகியவர் மீது இறைவனின் சாபம் உண்டாகும் (நூல்: அஹ்மத்)

> அண்ணல் நபி(ஸல்) அவர்கள் லஞ்சம் கொடுப்பவனையும், வாங்குபவனையும் சபித்திருக்கிறார்கள் (நூல்: அபூதாவூத் மிஷ்காத்)

> எந்தச் சமுதாயத்தில் லஞ்சம் பெருகிவிடுகின்றதோ அந்தச் சமுதாயத்தை அச்சமும் பீதியும் சூழ்ந்தே தீரும்[14] (நூல்: அஹ்மத், மிஷ்காத்)

> ஆட்சியாளருக்கு இலஞ்சம் கொடுப்பவர் மீதும் இலஞ்சம் வாங்குகின்ற ஆட்சியாளர் மீதும் அல்லாஹ்வின் சாபம் உண்டாகட்டும்[15] (நூல்: முன்கதா)

பிறருடைய உரிமையைப் பறித்திட அரசு ஊழியர்களுக்கும், அதிகாரிகளுக்கும் தரப்படும் பணமே இலஞ்சம் ஆகும். அச்செயலை அண்ணலார் (ஸல்) அவர்கள்

சபித்துள்ளார்கள். இது கேளிக்கை விடுதிகள், கூத்து, சினிமா கொட்டைகைகள் மூலம் வருமானத்தைப் பெருக்குவதையும் லாட்டரி மூலம் பணம் சேர்க்க முயல்வதையும், தடுக்கப்பட்ட பொருள்களை விற்பனை செய்வதையும் தடுக்கப்பட்ட முறையில் வியாபாரம் செய்வதையும் இஸ்லாம் மிகவும் கண்டிக்கிறது. எனவே நாம் எத்தனை நற்செயல்கள் புரிந்திருந்தாலும் நமது செயல்களும், பிரார்த்தனைகளும் இறைவனிடம் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு ஏற்றவாரு சம்பாத்தியம் ஆகுமான முறையில் இருத்தல் வேண்டும்.

**வட்டி**

வட்டிபாவங்களில் கொடியதாகும். பணத்தை வைத்து எவ்வித உழைப்பும் இல்லாமல் பணத்தைப் பெருக்கும் வட்டி வாங்குதல் ஏழைகளின் இரத்தத்தை உறிஞ்சுவதற்குச் சமமானதாகும். வாழ்க்கையில் சிரமம்படுபவர்களின் தேவைக்காக வட்டிக்குக் கொடுத்து வட்டிக்கு மேல் வட்டி வாங்குவதை இஸ்லாம் தடை செய்துள்ளது. பிறர்படக்கூடிய கஷ்டங்களை நீக்கி வைப்பது ஒவ்வொரு முஸ்லிமின் கடமை. தன்னால் முடிந்தால் தன்னை நாடி வரக்கூடியவர்களுக்குக் கடனளித்து உதவவேண்டும். கடன் பெற்றவருக்குக் கடுமையான நிபந்தனைகள் விதிக்காமல் தாராளமாகத் தவணைகள் அளித்து கடின வார்த்தைகள் கூறாமல் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும். அப்படியில்லாமல் சிரமத்திற்குள்ளாகி இருப்பவர்களுக்குக் கொடுத்த கடனுக்கு வட்டிக்கு வட்டிப் போட்டு மேலும் சிரமம் கொடுப்பது, இஸ்லாத்தில் தடை செய்யப்பட்டுள்ளது. நாமும் நம்முடைய தேவைகளைச் சுருக்கி சிக்கனமாக வாழ்ந்தால் கடன் பெற வேண்டிய சூழ்நிலையோ, கடனுக்கு மேல் கடன்பட்டுக் காலமெல்லாம் கஷ்டப்பட வேண்டிய கட்டாயமோ ஏற்படாது. பொருளைக் கொடுத்துப் பணம் பெற்றுக்கொள்ளும் வியாபாரம் போன்றதன்று பணம் கொடுத்துவிட்டு, அதற்கு மேல் பணம் பெறும் வட்டி. இதனைத் திருமறையில் இறைவன்,

> வட்டி (வாங்கி) உண்ணுகிறவர்கள் (மறுமையில்) ஷைத்தானால் பீடிக்கப்பட்ட ஒருவன் பைத்தியம் பிடித்தவனாக எழுவது போன்று அல்லாமல் எழமாட்டார்கள் (2:275)
>
> அல்லாஹ் வட்டியை எந்த பரக்கத்தும் இல்லாமல் அழித்து விடுவான் (2:276)

> உங்களுடைய செல்வம் வளரும் விதமாக மற்றவர்களுடைய பொருள்களில் சேர்ந்து வட்டிக்கு விடுவதால் அது அல்லாஹ்விடம் பெருகுவதில்லை (30:39)

என்றும்

> நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், வட்டி வாங்குபவர்கள் மீதும், வட்டி கொடுப்பவர்கள் மீதும் அவ்விருவருக்கும் சாட்சியாக இருப்பவர்கள் மீதும், வட்டிக் கணக்கு எழுதுபவர்கள் மீதும் சாபமிட்டார்கள்[16] (நூல்: புகாரி முஸ்லிம்)

என்று நபிமொழியும் மொழிகின்றன.

**பொருளாதாரமும் அதன் எல்லைகளும்**

பொருளாதாரத்தில் எல்லையில்லாமல் சம்பாதிக்க வட்டி வாங்குபவன் ஆசைப்பட்டு இவ்வட்டியினால் மனித அன்பு, மனிதச்சமத்துவம், மனிதாபிமானம் பரிவு முதலியவை வெட்டி வீசுகிறான். இதற்குப் பின்வரும் சூழல்கள் சான்றுகளாகும். அவையாவன:

- ஒருமனிதர் அவர் வைத்திருக்கும் பொருள்களில் ஒன்றை மற்றவருக்குக் கடனாக அளிக்கிறார். அக்கடனைத் திரும்பச் செலுத்த ஒருகால் அளவை நிர்ணயிக்கிறார். அந்தக்கால அளவுக்குள் திரும்பக் கொடுக்காவிட்டால் அவனுக்கு மேலும் கால அவகாசம் கொடுத்துப் பொருளின் விலையை அதிகப்படுத்துவது.

- ஒருவர் இன்னொருவருக்குப் பணம் கடனளிக்கும் போது இந்தக்கால அளவுக்கு இவ்வளவு பணத்தை, அசலை விட அதிகமாகக் கொடுக்க வேண்டும் என நிர்ணயிப்பது.

- கடன் கொடுத்தவன் மற்றும் பெற்றுக் கொண்டவன் இடையே குறிப்பிட்ட வட்டி நிர்ணயிப்பது, அந்தக்கால அளவிற்குள் குறிப்பிட்ட வட்டியுடன் திரும்பக் கொடுக்காவிட்டால், முன்பை விட அதிக வட்டியுடன் கால அவகாசத்தை நீட்டிப்புச் செய்வது

என்பனவாகும். இதனால் சமுதாய நலன் கெட்டு விடுகின்றது. பெரும்குடும்பங்கள் வட்டியினைக் கட்ட இயலாமல் தனது சொத்துக்கள் அனைத்தையும் விற்று நடுத்தெருவிற்கு வந்துவிடுகின்றனர். சிலர் தற்கொலையும் செய்துகொள்கின்றனர். ஆனால் வட்டிக்குக் கொடுத்தவர் மட்டும் மகிழ்ச்சியாக வாழ எண்ணுகிறார். அதனாலேயே புனித குர்ஆன் வட்டி வாங்குபவர்களைப் பைத்தியக்காரர் என்கிறது.

**வட்டியால் ஏற்படும் இலாபம்**

வட்டித்தொழில் ஒருவனுக்கு லாபத்தையும் அடுத்தவனுக்கு நஷ்டத்தையும் ஏற்படுத்துகிறது. அல்லது ஒருவனுக்கு ஒரு குறிப்பிட்ட லாபத்தை உறுதி செய்து மற்றவனுக்கு நிச்சயமற்ற லாபத்தை உறுதிப்படுத்துகிறது. வியாபாரத்தில் விற்பவன், வாங்குபவன் எங்கும் அலையாமல் அப்பொருளைக் கையில் கொண்டு வந்து கொடுத்ததில் லாபம் அடைகிறான். வியாபாரி அதற்காகப் பட்ட உழைப்பு, நேரம், முதலீடு ஆகியவற்றால் லாபம் அடைகிறான்.

வியாபாரத்தில் ஒரு பொருளை விற்பதில் எவ்வளவு லாபம் வந்தாலும் அது ஒருமுறை மட்டுமே. ஆனால் வட்டிக்குப் பணம் கொடுத்தவனுக்குக் காலம் செல்ல செல்ல அவனது வட்டியும் ஏறிக் கொண்டே செல்லும், கடன் பெற்றவன் அந்தப்பணத்தைக் கொண்டு பலன் அடைவதில் ஒரு குறிப்பிட்ட அளவு நிர்ணயம் உள்ளது. ஆனால் கடன் கொடுத்தவனுக்கு அதன் பலனை அடைவதில் இலாப எல்லையே கிடையாது. சில சமயம் கடன் பெற்றவரின் முழு உழைப்பு, வீடு, வீட்டுப்பொருட்கள் ஏன் அவனது உடையைக் கூடக் கழட்டிக் கொடுத்தாலும் இன்னும் கடன் பாக்கியிருக்கும். வட்டியின் மூலம் வட்டிக்காகப் பணம் வாங்கியவன், பிச்சைக்காரன் ஆகிவிடுகிறான்.

வியாபாரத்தில் பொருள் விலை நிர்ணயம் என்பதெல்லாம் அப்பொருளினை விற்ற அன்றைக்கே முடிந்துவிடும். அதைப்போலவே, வீடு, நிலம், சொத்து முதலியவைகளை வாடகைக்கு விட்டால், அந்தச் சொத்துக்கள் விலையாகி விடுவதில்லை, அவை வாடகை கால ஒப்பந்தம் முடிந்தவுடன் திரும்ப நமது கைக்கே வந்துவிடும். ஆனால் கடன் பெற்றவன் அதனைச் செலவு செய்து விடுகிறான். அவன் அந்தப் பணத்தை மீண்டும் சம்பாதித்து வட்டியுடன் சேர்த்துக்கொடுக்க வேண்டியவனாகின்றான்.

வியாபாரம், விவசாயம், தொழில் இவற்றில் மனிதனின் உடலுழைப்பு, அறிவின் உழைப்பு, நேரத்தின் இழப்பு இவற்றைக் கொடுத்து நிச்சயமற்ற பலனை அடைகிறான். ஆனால் வட்டித் தொழிலில் ஒருவன் தன்னுடைய தேவைக்குப்போக மீதிப் பணத்தைக் கொடுத்து விட்டு எந்தவிதச் சிரமமுமின்றிப் பிறரின் உழைப்பால் வரும் லாபத்தின் பெரும் பங்கை முன்பே உறுதி செய்யப்பட்ட வகையில் அடைந்து விடுகிறான்.

**மனிதத்தன்மைக்கு முரணானது**

வட்டி அழிவுக்குக் காரணமாகிறது. இயல்பாகவே வட்டி வாங்குகிறவர்கள், தன்னலம், கஞ்சத்தனம், அடாவடித்தனம் கருணையற்ற உள்ளம், பணவெறி முதலிய தீய குணங்களோடு காட்சி தருபவர்களாகவும், மனிதாபிமான வேரைப்பிடுங்கி எறிபவர்களாகவும் இருப்பதைக் காண்கிறோம். அதேபோல வட்டிக் கொடுப்பவரிடம் வெறுப்பு, குரோதம், பழிவாங்கும் எண்ணம், பொறாமை போன்ற குணங்கள் தோன்றவும் வட்டி காரணமாகிறது. இது இறுதியில் பற்றின்மையையடையச் செய்து ‘வர்க்க’ப் போராட்டத்திற்கு அழைத்துச் செல்கிறது. இதனால் பணக்காரர்களிடம் முதலாளித்துவப் போக்கும் ஏழைகளிடம் கம்யூனிசப் போக்கும் வளர்வதற்குக் காரணமாகிறது.

இயற்கையின் அமைப்பில் செல்வத்தின் பங்கீட்டில் தன்னுடைய தேவைக்கு அதிகமான பங்கை உடையவன் மட்டுமே வட்டிக்குக் கடன் கொடுக்கக் கூடியவன்; அல்லது வட்டிக்காகப் பணத்தை வங்கியில் சேமித்து வைப்பவன். ஒருவனுக்கு அவனுடைய தேவைக்கு அதிகமாகச் செல்வம் கிடைத்தால் அது அல்லாஹ்வின் கருணையால் கிடைத்த பலன் என்று திருக்குர்ஆன் கூறுகிறது. இந்தக் கருணையின் பலனைப் பிறருக்கு ஜகாத், சதக்கா[17], தானதர்மம், வட்டியின்றிக் கடனளித்தல் ஆகியவை மூலமாக உதவி செய்ய வேண்டுமென்று இறைமறை கட்டளையிடுகிறது. இதற்கு மாறாகத் தன் தேவைக்கும் குறைவாகச் சம்பாதிப்பவனுக்கு இருப்பவர்களிடமிருந்து பிடுங்கிக் கொடுப்பது பெருங்குற்றம் அக்கிரமம், அநியாயம் என்றும் தீய நடவடிக்கை என்றும் இஸ்லாம் கருதுகின்றது.

**வட்டியிலிருந்து பாதுகாத்துக்கொள்ளுதல்**

வட்டியிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ளுதல் அவசியமானதாகும். ஏனெனில் வட்டி சமூகக்கேட்டினை உண்டாக்கக் கூடியவை ஆகும். வட்டிபெறாமல் தம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்கு,

> வட்டியிலிருந்து பாதுகாப்பாக இருக்கப் பல வழிமுறைகள் உண்டு. உதாரணமாக ஒரு கிலோ அரிசி ஒருவருக்குக் கடனாகக் கொடுத்து அதே போன்று ஒரு கிலோ அரிசியை திரும்பப் பெறுவதில் வட்டி ஏற்படாது. எடையிலோ, தரத்திலோ கூடுதல், குறைதல் ஏற்பட்டால் அது வட்டி ஆகிவிடும்.சில பொருள்களை நிறுத்தி வாங்குவதும், சிலவற்றை அளந்து வாங்குவதும், சிலவற்றை எண்ணிக்கையில் வாங்குவதும் உண்டு. இந்த எல்லாவகையிலும் மாறுதல் வரக் கூடாது. பத்து ரூபாய்க்கு ஒரு பொருளைக்கொடுத்து, அதே பத்து ரூபாய் மதிப்புள்ள வேறொரு பொருளைப் பெறுவதாக இருந்தால். இரு தரப்பிலும் சம்மதம் ஏற்பட வேண்டும். இந்த மாதிரி பண்டமாற்று உடனுக்குடன் செய்து கொள்ள வேண்டும். இதில் காலதாமதம் ஏற்படக் கூடாது[18] (நூல்: ஷாணீத்தன்வீர், ∴பதாவா ஹிந்தியா)

எனும் நபிமொழியின் சான்றாகவுள்ளது. இஸ்லாம் வட்டியின் எல்லாத் தொடர்புகளிலும் முழுமையாக விலக்கி வைத்துள்ளது; தடை செய்துள்ளது. இஸ்லாமிய நாடுகளில் வட்டித் தொழில் ஒரு தண்டனைக்குரிய குற்றமாகும். வட்டிக்குக் கொடுப்பது, வட்டிக்கு வாங்குவது, அதற்காகச் சாட்சி மற்றும் கணக்குகள் போடுவதற்குத் துணை போவது போன்ற அனைத்துச் செயல்களையும் இஸ்லாம் தடுத்துள்ளது.

**ஜக்காத்[19] - இஸ்லாமியர்களின் நான்காம் கடமை**

இஸ்லாமியர்களின் ஐம்பெருங்கடமைகளுள் ஜக்காத்தும் ஒன்று. ஏனைய கடமைகளான ஈமான், தொழுகை, நோன்பு, ஹஜ் என்பனவாகும். இதில் ஈமான் என்பது உறுதியான இறை நம்பிக்கையும், முஹம்மது நபி ஸல்லல்லாஹீ அலைஹி வசல்லம் அவர்களை இறுதித்தூதராக ஏற்றுக் கொண்டு அவர்களின் வழிநடக்க உறுதிப்பாடு எடுத்துக் கொள்வதுமாகும். தொழுகை என்பது

அல்லாஹ்வுக்கு அடியான் செலுத்தும் நன்றிக் கடமையாகும். ஹஜ் என்பது இறுதிக் கடமை மட்டுமல்லாது, மனித குலம் அனைத்தும் ஓரினம் என்ற உணர்வையும், ஓர் இறைவன் ஓர் இறையாலயம் என்ற தத்துவத்தையும் உலகுக்கு மெய்ப்பிக்கும் கடமையாக திகழ்கிறது. ஜக்காத் என்பதோ ஆன்மாவோடு தொடர்பு கொண்ட பொருளியல் கடமையாகக் கருதலாம். ஜக்காத் ஒரு இஸ்லாமியப் பொருளாதாரக் கொள்கையாகும்.

ஏனைய கடமைகளுக்குச் செய்ய வேண்டிய முறைகள் இருப்பது போன்றே ஜக்காத்தும் முறையாகச் செய்யப்பட்டாலே அது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜக்காத்தாக அமையும். இல்லையெனில் அது தர்மம் ஆகலாமே தவிர முறையாக நிறைவேற்றப்பட்ட ஜக்காத் எனும் கடமையாக ஆகாது.

ஜக்காத் என்பது பற்றி விலங்கிக்கொள்ளுதல், அது எவ்வாறு கணக்கிடப்பட வேண்டும், யார் யாருக்கு எப்படிக் கொடுக்கப்பட வேண்டும் என்று தெரிந்து கொள்வது இஸ்லாமியர்கள் மீது கடமையாகின்றது.

“இஸ்லாத்தின் ஐம்பெருங்கடமைகளுள் நான்காவது ‘ஜக்காத்’. ஜக்காத் என்னும் அரபுச்சொல்லுக்கத் ‘தூய்மையாக்கல்’ என்பது பொருள். ஒவ்வொரு முஸ்லிமும் ஆண்டு தோறும் தனது சொத்திலிருந்து அல்லது வேறுவகையில் வரும் வருமானத்திலிருந்து நாற்பதில் ஒரு பங்கை ஏழை எளியவர்களுக்குத் தானமாகத் தரவேண்டுமென்பதை இக்கடமை வலியுறுத்துகிறது”[20] என்கிறார் உ. அலிபாவா.

ஜக்காத் என்னும் அரபுச்சொல்லிற்குத் தூய்மைப்படுத்துதல் எனப்பொருளுண்டு. பொருள்களை ஹலாலான முறையில் சம்பாதித்து ஹலாலான முறையில் செலவழிக்க இஸ்லாம் வலியுறுத்துகிறது. இருப்பியும் தெரிந்தோ தெரியாமலோ குறைகள் நேர்ந்து விடலாம் அந்தக் குறைகளைக் கழுவி பொருளின் மீது ஏற்பட்ட கறையைத் தூய்மைப்படுத்துகிறது ஜக்காத். அது மட்டுமல்ல பொருளை மனிதனுக்கு அளிப்பவன் அல்லாஹ்; பொருளின் உரிமையாளர் மனிதன். எனவே பொருளை அளித்த இறைவனுக்கு நன்றி செலுத்துவதற்காக இறைவனின் ஆணைப்படி உரிய சதவிகிதத்தை உரியவர்களுக்கு அளிக்க வேண்டியது அப்பொருளின் உரிமையாளர் மனிதன் மீது கடமையாகிறது.

**ஜக்காத் கொடுப்பதால் ஏற்படும் நன்மைகள்**

பொருள்கள் அனைத்தும் இறைவனுடைய ஆட்சிக்குட்பட்டதே என்று ஈமான் வலுப்படுகிறது. ஜக்காத் கொடுப்பவரின் பொருட்கள் இறைவனால் பாதுகாக்கப்படுவதோடு, அபிவிருத்தியும் ஏற்படுகிறது. ஜக்காத் வெறும் ஏழைகளின் வாழ்வில் மகிழ்ச்சி பிறக்கிறது. பணக்காரர்கள் மீது ஏழைக்குப் பாசம் ஏற்படுகிறது. வர்க்க பேதங்கள் தலை தூக்குவதில்லை. பொருள்களைச் சேர்க்க வேண்டும் என்ற அபரிதமான பேராசை கட்டுப்படுத்தப்படுகிறது. மனித வாழ்வில் பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் குறைந்து சமுதாய நலன் பெருகுகின்றது. இவை போன்ற பல நன்மைகள் ஜக்காத் கொடுப்பதினால் ஏற்படுகின்றது. திருமறையில் ஜக்காத்தைப்பற்றி,

> (நபியே)! ஆவர்களுடைய பொருள்களிலிருந்து தானத்தை வசூல் செய்து கொண்டு அதன் மூலம் அவர்களைத் தூய்மையாக்குவீராக(நல்வழியில்) அவர்களை முன்னேறச் செய்வீராக! மேலும் அவர்களுக்காக(நல்லருள் வேண்டிப்) பிரார்த்திப்பீராக
> (9:103)

> நீங்கள் தொழுகையைக் கடைபிடித்தும் ‘ஜகாத்’ கொடுத்தும் வாருங்கள் (ஏனென்றால் மரணத்திற்கு) முன்னதாக உங்களுக்காக நீங்கள் என்ன நன்மை செய்து அனுப்பியிருந்தீர்களோ அதனையே அல்லாஹ்விடம் (மறுமையில்) பெற்றுக்கொள்வீர்கள்
> (2:110)

> நீங்கள் தொழுகையைக் கடைபிடித்து தொழுகுங்கள் ஜாக்காத்தும் (மார்க்கவரி) கொடுத்து வாருங்கள்
> (2:43)

என்பதாய் மொழியப்பட்டுள்ளது. செல்வத்தையும் மனதையும் தூய்மைப்படுத்தும் வல்லமை ஜக்காத்திற்கு உண்டு. மேலும் மரணத்திற்கு முன்பாகச் செய்த நன்மைகளில் அது சேர்க்கப்படுகின்றது. மறுமையில் இறைவனிடத்தில் நற்கூலி பெறுவதற்கு அது வழி வகுக்கின்றது.

**ஜக்காத் கணக்கிடும் முறை**

'ஜக்காத்' எனும் கட்டாய ஏழை வரியைக் கணக்கிட்டு வழங்கும்படி இஸ்லாம் வலியுறுத்துகிறது. ஆண்டுக்கு ஒருமுறை தனது வருவாயைக் கணக்குப் பார்த்து நியாயமான செலவுகள் போக - மீதமுள்ள உபரி பணம், பொருள் மீது ஜக்காத் கொடுக்கப்பட வேண்டும். அந்த உபரியும் ஒரு குறிப்பிட்ட தொகைக்கு மேலிருந்தால் மட்டுமே 'ஜக்காத்' கடமையாகிறது. அதாவது 87 1/2 கிராம் தங்கம் அல்லது 612 1/2 கிராம் வெள்ளி (இதற்குசமமான மதிப்புள்ள ரொக்கம் அல்லது பொருள்கள் இருந்தாலும்) இவைகள் ஒரு ஆண்டு சேமிப்பாக இருந்தால் மட்டும் ஜக்காத் கடமையாகிறது.

ஜக்காத் என்பது குடியிருக்கும் வீடு, அன்றாடம் புழங்கும் பண்டம் பாத்திரங்களுக்குக் கிடையாது. வாடகை பணம், சேமித்து வைக்கப்பட்டுள்ள ரொக்கம், நகைகள், பொருள்கள் மீது ஜக்காத் கணக்கிடப்பட வேண்டும். விளையும் நிலங்களிலிருந்து வரும் விளைபொருள்களுக்கு அதிக அளவு ஜக்காத் கணக்கிடப்பட வேண்டும். பொதுவாக ஜக்காத் என்பது இரண்டரை சதவிகிதம் என்று இருந்தாலும் விளைபொருள்களுக்கு அதிக அளவு ஜக்காத் கணக்கிடப்பட வேண்டும்.

வானம் பார்த்த பூமியிலிருந்து விளையும் பொருளுக்கு இரண்டரை சதவிகிதமும் ஆற்று நீர்ப்பாசன வசதியுள்ள நிலத்திலிருந்து விளைபொருள்களுக்கு ஐந்து சதவிகிதமும் கணக்கிட்டுக் கொடுக்க வேண்டும். வியாபாரப் பொருள்களான சரக்கு, ஆடு, மாடு, ஒட்டகம் போன்றவற்றுக்கு ஜக்காத் இரண்டரை சதவிகிதம் கணக்கிடப்பட வேண்டும். ஜக்காத் சேமிப்புக்கு விதிக்கப்படும் ஏழை வரியாகும்.

**ஜக்காத் பெற உரிமை பெற்றவர்கள்**

ஜக்காத்தை முறையாகக் கொடுக்க வேண்டும். யார் யாருக்குக் கொடுக்க வேண்டும் என்ற விபரத்தினை திருக்குர்ஆன் எடுத்துரைக்கிறது.

> (ஜக்காத் எனும்) தானங்களெல்லாம் வரியவர்களுக்கும் ஏழைகளுக்கும் அவற்றை வசூலிப்பவர்களுக்கும் எவர்களுடைய இதயங்கள் (புதிய அன்பு கொண்டு) இஸ்லாத்தில் ஒன்று சேர்க்கப்பட்டிருக்கின்றனவோ அவர்களுக்கும்,

> அடிமைகளை விடுதலை செய்வதற்கும், கடனாளிகளுக்கும், அல்லாஹ்வின் பாதையில் உள்ளவர் களுக்கும், வழிப்போக்கர்களுக்கும், உரியவையாகும். இது அல்லாஹ்வினால் கடமையாக்கப்பட்டதாகும் அல்லாஹ்வே நன்கறிகிறவன் தீட்ச்சண்ய ஞானமுடையவன் (9:60)

எனும் இறைமறையின் வசனத்தின்படி எட்டு வகையானவர் ஜக்காத்தைப் பெற உரிமை பெற்றவர்களாகிறார்கள்.

**பக்கீர்கள்**

பற்றாக்குறையான பொருள் உள்ளவர்கள் பக்கீர்கள்[21] இவர்கள் வறுமையினால் வாடினாலும் வாய்திறந்து பிறரிடம் கேட்காத தன்மையுடையவர்கள்.

**மிஸ்கீன்கள்**

அடிப்படைத் தேவைகள் வசதிகள் ஏதுமற்றவர்கள் மிஸ்கீன்கள்[22] ஆவர். வாய்விட்டுக் கேட்டாலன்றி தேவைகளை நிறைவேற்ற முடியாதவர்கள். இவர்கள் பக்கீரை விடவும் வறுமையிலுள்ளவர் ஆவர்.

**இஸ்லாமிய அரசின்பால் வசூலிப்பவர்**

ஜக்காத்தை முறையாகக் கொடுக்கக் கடமைப்பட்டவர்களிடமிருந்து வசூலித்து வருவதற்காக நியமிக்கப்பட்டவர்கள். இஸ்லாமிய அரசாங்கத்தால் நியமிக்கப்படுவதுண்டு. வசூலித்து வரும் தொகையில் ஒரு பகுதியை அவர்களுக்கு சம்பளமாகக் கொடுக்கப்படும்.

இஸ்லாமிய அரசு இயங்காத இடங்களில் மஹல்லா[23] நிர்வாகிகள் "பைத்துல்மால்" அமைத்து இதற்கான ஏற்பாட்டை செய்யலாம். மஹல்லா நிர்வாகம் ஓரளவு ஒருசில இஸ்லாமிய ஆட்சி ஆகும்.

**புதிதாக இஸ்லாத்தில் இணைந்தவர்கள்**

புதிதாக இஸ்லாத்தில் இணைந்தவர்கள் இவர்களை "மௌவான இஸ்லாம்"[24] என்பார்கள் புதிய சமுதாயத்தில் புதிய வாழ்க்கையைத் தொடங்க உதவிகள் தேவைப்படலாம். இவர்களுக்கு ஜக்காத் கொடுக்கப்படும்.

**அடிமைகளை விடுதலை செய்ய வேண்டி**

மனித அடிமைகளை விடுவிக்கத் தேவையான நஷ்ட ஈடு வழங்க ஜக்காத் பணத்தைக் கொடுக்கலாம். தற்காலத்தில் கொத்தடிமைகள் இருக்கின்றார்கள். அநீதியாகச் சிறையிலடைக்கப்பட்டவரை விடுவித்தலும் இதில் அடங்கும்.

**முஸாபிர்கள்**

முஸாபிர்கள்[25] இவர்கள் நியாயமான காரணத்துக்காகப் பயணம் (ஸபர்) செய்பவர்கள், வசதியுள்ளவராக இருந்தும் பயணத்தில் பொருள் களவு போய்ச் சிரமப்படுவரும் இதில் அடங்குவர்.

ஜக்காத்தை முதலில் ஏழையான தனது நெருங்கிய உறவினர்களுக்கும், இரண்டாவது அண்டை அயலாருக்கும் (மஹல்லா) மூன்றாவது ஏனையோருக்கும் கொடுப்பது சிறந்ததாகும்.

**நபி (ஸல்) அவர்களின் எச்சரிக்கை**

ஜக்காத்தைப் பெற நினைப்போருக்குப் பெருமானார் (ஸல்) அவர்கள் சில எச்சரிக்கைகளை விடுவித்துள்ளார்கள்.

> எந்தச் செல்வத்தில் ஜக்காத் கலந்திருக்கின்றதோ
> அந்தச் செல்வம் அழிந்துவிடுகின்றது[26] (நூல் : மிஷ்காத்)

என்று எந்தச் செல்வத்தில் ஜக்காத் கடமையாகின்றதோ அந்தச் செல்வத்திலிருந்து ஜக்காத் வழங்கப்படவில்லையெனில் அந்தச் செல்வம் முழுவதும் இறைவனுடைய அருள் இல்லாமல் போய் விடுகின்றது என மொழிகிறார். எனவே அவனின் செல்வம் குறைந்து ஏழையாகிவிடுகின்றான்.

செல்வச் செழிப்பில் வாழும் ஒரு மனிதன் ஜகாத்தைப் பெற தகுதி இல்லாதிருந்தும் மக்களிடமிருந்து அதனை வாங்குகின்றான். இத்தகையவன் ஜகாத்தையும் பிற தர்மங்களையும் வாங்கித் தன் செல்வத்தோடு சேர்த்து முழுச் செல்வத்தையும் தூய்மையற்றதாக்கி விடுகின்றான் என்ற கருத்தினை நபிமொழி உணர்த்துகின்றது.

## தம்பொருளும் பிறர் பொருளும்

மனிதன் தன்னிடமுள்ளதையெல்லாம் தன் பொருள் என்கிறான். உண்மையில் அவன் உண்டு தீர்த்ததும், உடுத்திக் கிழித்ததும், அல்லாஹ்வின் பாதையில் செலவழித்து மறுமைக்காகச் சேகரித்து வைத்துக் கொண்டதுமே அவன் பொருளாகும். மீதமுள்ளவையெல்லாம் அவன் பிறருக்காகச் சேகரித்த பொருளாகும்.

அண்ணலார் ஒருமுறை தமது தோழர்களை நோக்கி உங்களில் உங்கள் பொருள்களைவிடப் பிறரின் பொருள்களை அதிகம் விரும்பியவர் யார்? எனக் கேட்டார்கள் 'அல்லாஹ்வின் தூதரே, தங்கள் பொருளைவிடப் பிறரின் பொருள் மீது அதிக விருப்பம் காட்டுபவர் யாராக இருக்கமுடியும்?' எனத் தோழர் வினவினர். தருமஞ்செய்து முன்கூட்டியே மறுமைக்காக அனுப்பப்பட்டது தான் உங்கள் பொருளாகும். மீதமுள்ளவையெல்லாம் பிறருக்குச் சொந்தமானதாகும் என்று அண்ணலார் விடைபகர்ந்தார்கள்.

> அல்லாஹ் ஒருவனுக்குப் பொருளைக் கொடுத்திருக்க அவன் அதற்குரிய ஜக்காத்தைச் செலுத்தவில்லையாயின் அந்தப் பொருள் மலைப்பாம்பின் உருவாமாக்கப்படும். அதற்கு இரு விஷப் பற்களிலிருக்கும். அது மறுமை நாளில் அவன் மேல் மாலையாகச் சுற்றிக் கொள்ளும் பிறகு தன்னுடைய இரு அலகுகளாகும் அவனைப் பிடித்துக்கொண்டு நான் உனது சேமிப்பு என்று கூறும்

என நபிகள் நாயகம் (ஸல்) கூறியுள்ளார்கள். இறைவன் திருமறையிலே செல்வத்தினைப் பற்றி மனிதருக்கு,

> செல்லத்தைக்கண்டு நீ பூரித்து விடாதே! ஏனெனில் பூரித்திருப்பவர்களை இறைவன் நேசிப்பதில்லை இறைவன் உனக்கு வழங்கியுள்ள செல்வத்தின் மூலம் மறுமையின் வீட்டைப் பெற அக்கறைகொள் (28:76)

எனத் தெளிவுபடுத்துகிறான்.

இறைவன் நமக்களித்த செல்வத்தினைக் கொண்டு பேராசைபடுதலும், அகந்தைக் கொள்வதும் கூடாது. பூரித்துக் கொண்டு தற்பெருமை கொள்வதும் இறைவனுக்குப் பிடிக்காத செயல்களாகும். இறைவன் மனிதனுக்கு அளித்த செல்வத்தினைக் கொண்டு ஏழை எளிய மக்களுக்கு உதவுதல் இறைவனின் பெயரால் 'சதக்கா' செலவுகள் செய்தல், ஜக்காத்தை ஆண்டு தோறும் கொடுத்தல், செல்வத்தைத் தூய்மைபடுத்தும். இதுபோன்ற செலவு செய்யும் பொருளைக் கொண்டு அவர்களுக்காக இறைவன் மறுமையில் வீட்டைக்கட்டுகின்றான். என்பதனை இவ்வசனம் உணர்த்துகிறது.

**ஜக்காத் குறிப்பு**

விற்பனை வரி, வருமானவரி போன்ற வரிகளை அரசுக்குக் கட்டுகின்றோம். ஆனாலும் ஜக்காத் கொடுக்க வேண்டுமாயெனில். ஜக்காத்கொடுத்தாக வேண்டும். இவ்வரிகளைக் கட்டியும், வீட்டின் செலவுகள் அனைத்தும் செய்தும் பிறகு தம்மிடம் மீதமிருக்கும் வைப்பு நிதி அல்லது அதற்கான பொருள்கள் (ஜக்காத்தின் அளவு) ஒரு வருடம் ஒருவரிடம் சேமிப்பாக இருந்தால் அவர்மீது ஜக்காத் கடமையாகும்.

வறுமை ஈமானைத் தின்று விடும் எனச்சொல்லப்படுகிறது. எனவே மனிதன் வறுமையில் சிக்கிக்கொள்ளாமல் தன்னைத் தவிர்த்துக் கொள்ளுதல் கடமையாகும். மனிதன் நியாயமான முறையில் வியாபாரம் செய்து பொருளீட்டுவது நிலத்தில் பாடுபட்டு விவசாயம் செய்து உணவு தானியங்களைப் பெறுவதும், உழைத்து உண்பதும், வேலை செய்து பிழைப்பதும், தனது மனைவி மக்களைக் காப்பாற்றுவதும் இறைவனுக்கு மிகவும் பிரியமான பொருளீட்டு முறையாகும். மேலும் ஆண்டு தோறும் இறைவழியில் செலவுகள் செய்தல், ஜக்காத்தும் கொடுத்து வருதலும் இறைவனுப் பிடித்த செயலாகும். மறுமையில் இறைவன் உலகில் செலவு செய்தவனுக்கு மறுமையில் சிறந்த அந்தஸ்து எனும் நிலையினை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றான் என்பதினை விளங்கிக்கொள்ள முடிகின்றது.

பொருளீட்டாமல் சோம்பேறியாக இருந்து வணக்கம் புரிவதை விட உழைத்து மனைவி மக்களைக் காப்பாற்றுவது மேலான செயல் என இஸ்லாத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஒருவர் தன்கைகளால் உழைப்பதும், மோசடி, பொய் இல்லாமல் செய்யும் வாணிபமும் எல்லாவற்றிலும் சிறந்த ஊதியம் என்றும் மனிதன் மறுமையில் நற்கூலி பெறும் பொருட்டுத் தன் வீட்டாருக்குச் செலவிடும் போது அது அவனுக்கு அறமாக (ஸதகாவாக) ஆகிவிடும் என்றும் நபி (ஸல்) கூறியுள்ளார்கள்.

முடிவுகள்

- ❋ மனித வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களை, செல்வங்களைத் தேடும்போது இறைவனுடைய கட்டளைப்படியே தேட வேண்டுமென்று இஸ்லாம் கூறுகிறது.

- ❋ வியாபாரம், விவசாயம், கைத்தொழில், கூலி வேலை போன்ற தொழில் முறைகளில் பொருளீட்டும் போது அளவையிலும் நிலுவையிலும் நேர்மைத் தன்மை இருத்தல் வேண்டும் எனத் திருமறை மொழிகிறது.

- ❋ நபிகள் நாயகம் (ஸல்) வர்த்தகத்தில் 'பொருள் விருத்தியுண்டு' என்கிறார்.

- ❋ விற்பனையாளர், விற்பனை பொருட்களைப் பதுக்கி வைப்பதை இஸ்லாம் வண்மையாகக் கண்டிக்கிறது. பதுக்கல் செய்பவன் பாவியாவான் எனத் திருமறை மொழிகிறது.

- ❋ மனித வாழ்க்கையில் பணத் தேவைகளுக்காக அடைமானம் வைப்பதை ஏற்றுக் கொள்கிறது. ஆனால் அடைமானமாக ஏற்றப் பொருளை உபயோகப் படுத்துவதையோ திருப்பிக் கொடுப்பதில் மோசடி செய்வதையும் கொடுத்த பணத்திற்கு வட்டி வாங்குவதையும் கடுமையாகக் கண்டிக்கிறது. மோசடி என்பது மறுமை நாளில் இளிவிற்கும் மனவருத்தத்திற்கும் வழி வகுக்கும் என்று திருமறை கூறுகிறது.

- ❋ உங்களின் உணவில் பத்தில் ஒன்பது பங்கு வியாபாரத்தாலேயே கிடைக்கின்றது. எனவே வியாபாரத்தை விரும்பிப் பிடியுங்கள் என முகம்மது நபி (ஸல்) கூறுவதன் மூலம் இஸ்லாம் வியாபாத்தை மேன்மைப் படுத்துகிறது. எனினும் பொருட்களை அதிக விலைக்கு விற்பதையோ, கலப்படம் செய்வதையோ, நிலுவையில் மோசடி

செய்வதையோ, தடை செய்த பொருட்களை விற்பனை செய்வதையோ இஸ்லாம் ஏற்கவில்லை. அவ்வாறு செய்பவர்களுக்குக் கடுமையான தண்டனைகளை மார்க்கம் இயம்புகிறது.

❋ சிலைகள், சிற்ப உருவங்கள், மது, போதை பொருட்கள் போன்றவற்றைத் தயாரிப்பதும் விற்பதும் இஸ்லாத்தில் விலக்கப்பட்ட தொழிலாகும். பன்றி இறைச்சியும் இரத்தமும் விற்பனை செய்தல் கூடாது. சூதாட்டத் தொழில்களில் ஈடுபடுதல் கூடாது.

❋ இஸ்லாம் ஈதலுக்கு முன்னுரிமை அளிக்கிறது. 'யாசிப்பவன் குதிரை மீது ஏரி வந்து யாசித்தாலும் வழங்குங்கள்' என்று நபிகள் நாயகம் (ஸல்) மொழிகிறார்.

❋ பெண்களை வைத்து விபச்சார விடுதிகள் நடத்துவதையும் விபச்சாரம் செய்வதையும் திருமறை வழி இறைவன் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறான்.

❋ அல்லாஹ் வட்டியை எந்தப் பரக்கத்தும் இல்லாமல் அளித்துவிடுவான் என்று திருமறை கூறுவதன் வழிப் பணத்தைப் பெருக்க வட்டி வாங்குவதை இஸ்லாம் தடுக்கிறது.

❋ ஜக்காத் இஸ்லாமியரின் நான்காம் கடமையாகும். இவ்ஏழைவரியை ஒரு இஸ்லாமியர் தன் வருமானத்தில் கணக்கிட்டு வழங்கும் படி இஸ்லாம் வலியுறுத்துகிறது.

## அடிக்குறிப்புகள்

1. அப்துல் க.்.பார் ரஹ்மானி, மாநபி மணிமொழிகள், ப.319
2. இஹ்திகார் - பதுக்கள், உணவு தானியங்களை விளைவாசி உயர்விற்காகப் பதுக்கி வைத்தல் ஆகும்.
3. அப்துல் க.்.பார் ரஹ்மானி, மு.நூ., ப.321.
4. மேலது.,, ப.310.
5. ஷஹீத் - இறைவழியில் உயிர் தியாகம் செய்தோர்.
6. ஜலீல் அஹ்ஸன் நத்வீ, அண்ணல் நபிகளார் வாழ்வினிலே, ப.91.
7. மேலது.,, ப.91.
8. கே.வி.எஸ். ஹபீப் முஹம்மத், வேதவரிகளும் தூதர் மொழிகளும் (தொ.ஆ.), ப.128.
9. மேலது.,, ப.128.
10. மேலது., ப.173.
11. மேலது., ப. 157.
12. மேலது., ப.173.
13. மேலது., ப.127.
14. அப்துல் க.்.பார் ரஹ்மானி, மு.நூ., ப.312.
15. ஜலீல் அஹ்ஸன் நத்வீ, மு. நூ. ப.114.
16. மேலது., ப.113.
17. சதக்கா - இறைவழியில் செலவிடுதல்.
18. குலாம் ரசூல், மார்க்கச் சட்டங்கள், ப.146.
19. ஜக்காத் - ஏழைவரி, தூய்மைப்படுத்துதல்.
20. உ.அலிபாவா, தமிழில் இஸ்லாமியச் சதக இலக்கியங்கள், ப.203.
21. பக்கீர்கள் - வரியவர்கள்.
22. மிஸ்கீன்கள் - பக்கீர்களை விட வரியவர்கள்.
23. மஹல்லா - பள்ளிவாசல், இறையில்லம்.
24. மௌலான இஸ்லாம் - அனைத்துப் பாவங்களும் மன்னிக்கப்பட்ட மாசு மருவற்ற இஸ்லாத்தின் எஜமானர்கள்.
25. முஸாபிர்கள் - வழிப் போக்கர்கள்.
26. அப்துல்க.்.பார் ரஹ்மானி, மு.நூ., ப.123.